# வெற்றிடங்கள்

**வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்**
**(புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் இணை நிறுவனம்)**

**எமது நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

## (1) சுரங்கப் பொறியியலாளர் (Mining Engineer)

வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவம் (பின்வரும் 1 அல்லது 2 அத்துடன் 3)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் சுரங்கம் மற்றும் கனிய பொறியியல் பட்டத்தில் விசேடத்துவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் மண் வளங்கள் பொறியியல் பட்டத்தில் விசேடத்துவ விஞ்ஞான இளமாணிப் பட்டம்.

**சேவை அனுபவம்**

3. ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான சுரங்கத் துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவம்.

நிகரான நிறுவனம்/ Quartz Mining மற்றும் செயலாக்கத் திட்டமொன்றின் பயிற்சி அல்லது அனுபவம் மேலதிக அனுகூலமாகும்.

## (2) புவியியலாளர் (Geologist)

வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் புவியியல் (விசேட) பட்டம் (1ஆம் அல்லது 2ஆம் வகுப்புச் சித்தி) சகிதம் இரசாயனவியல் / பௌதீகவியல் / கனனி விஞ்ஞானம் / உயிரியல் போன்றவற்றை மேலதிக பாடமாகக் கொண்டிருத்தல்.

**மற்றும்**

**சேவை அனுபவம்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் புவியியல் துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவம்.

## (3) மனித வளங்கள் மற்றும் நிர்வாக முகாமையாளர் (Human Resources & Administration Manager)

வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் மனித வளம் / முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வர்த்தகத்தில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் மனித வளம் / முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வர்த்தகத் துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(01) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(02) மனித வளம் / நிர்வாகத் துறையில் ''கனிஷ்ட முகாமையாளர் வகுதியில்'' (JM 1-1) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## (4) உள்ளகக் கணக்காய்வாளர் (Internal Auditor)

வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமை மற்றும் அனுபவம் (பின்வரும் 1 அல்லது 2)

(01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் வர்த்தகம் / கணக்கியலில் ஒரு இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான கணக்காய்வுத் துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவம்.

(02) பதவிக்கு இயைபான கணக்காய்வு / கணக்கியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

பதவிக்கு இயைபான கணக்காய்வுத் துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(01) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் (1 அல்லது 2)

(02) பதவிக்கு இயைபான கணக்காய்வுத் துறையில் ''கனிஷ்ட முகாமையாளர் வகுதியில்'' (JM 1-1) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு**

- அடிப்படைச் சம்பளம் - (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) 71,730.00 மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி, தொழில்சார் கொடுப்பனவுகள், தொலைத் தொடர்பாடல் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, வேலைத்தள கொடுப்பனவு என்பன புவியியலாளர் மற்றும் சுரங்கப் பொறியியலாளர்களுக்கு உரித்தானது. (பொது நிறுவனங்களுக்கான அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் திருத்தங்களுக்கு உட்பட்டது)
- ஊழியர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு விரிவான மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- நிறுவனத்தின் நலன்புரி நன்மைகளுக்கான தகுதி

- **வயதெல்லை**
  22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான பொதுவான நிபந்தனைகள்**

- ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் சம்பளத்தின் 8% ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குதல் வேண்டும். நிறுவனத்தினால் 12% மற்றும் மேலதிகமாக ஊ.ந.பொ. நிதியத்திற்கு 3% மும் பங்களிப்புச் செய்யப்படும்.
- அரச கூட்டுத்தாபனம் / நியதிகள் சட்டச் சபை விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொடர்பாக உறுதிசெய்து கொள்வதற்காக உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
- கல்வித் தகைமைகள், அனுபவம், தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுய தரவுகளுடனான தமது விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்கு 2025-06-02ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**